# பட்டுக்கோட்டை நகராட்சி

**ஸ்ரீ சார்வரி வருடம் ஆவணி மாதம் 22–ம் தேதி திருவள்ளுவராண்டு 2051 (2020–ம் ஆண்டு செப்டம்பர் 11–ம் தேதி) வெள்ளிக் கிழமை மதியம் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சுப்பையா,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**பொருள் எண்..1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.2) அரசாணை எண்.**303**, நாள்.**09.09.2020** –ன்படி ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாடு திட்டம் (IUDM – 2020-21)-ன் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சி பகுதிகளில் கீழ்க்காணும் சாலைப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.**276.30** இலட்சத்திற்கு IUDM Grant– ரூ.221.04 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு ரூ.55.26 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | W. No. | Name of Work | Type of Work (BT/ CC) | Length in KM | Width in Meter | Estimate Cost Rs. Lakhs |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 1 | 12 | சீனிவாசபுரம் ஆற்றங்கரை சாலை. | **BT** | **0.370** | **4.00** | |
| 2 | 30 | பசும்பொன் நகர் | **BT** | **0.080** | **4.00** | |
| 3 | 30 | எஸ்.வி.நகர் 5வது தெரு | **BT** | **0.215** | **4.00** | |
| 4 | 31 | லெட்சத்தோப்பு குறுக்கு சாலை | **BT** | **0.180** | **4.00** | |
| 5 | 33 | மஹாராஜசமுத்திரம் சுடுகாடு சாலை. | **BT** | **1.170** | **4.00** | |
| 6 | 33 | வெட்டிக்காடு கணபதி நகர் | **BT** | **0.110** | **4.00** | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 25 | அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி சாலை.(மயில் பாளையம் சந்திப்பு முதல் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி முகப்பு வரை) | **BT** | **0.130** | **8.50** | |
| 8 | 25 | நாடியம்பாள்புரம் ஆற்றங்கரை குறுக்கு சாலை. | **BT** | **0.080** | **4.00** | |
| | | | | | | |
| 9 | 2 & 7 | கீழப்பாளையம் ஆற்றங்கரை சாலை. | BT | **0.870** | **4.00** | |
| 10 | 10 | வளவன்புரம் ஏரிக்கரை சாலை. | BT | **0.700** | **4.00** | |
| 11 | 24 | நாடிமுத்து நகர் சந்து | BT | **0.070** | **4.00** | |
| 12 | 27 | ஸ்டேட் பாங்க் காலனி சாலை. | BT | **0.245** | **4.00** | |
| 13 | 25 | ஆர்.இ.டி.சி.பின்புறம் ஆற்றங்கரை சாலை. | BT | **0.670** | **4.00** | |
| | | **TOTAL** | | **4.890** | | **276.30** |

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாடு திட்டம் (IUDM-2020-21) ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போக கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.138/2020/இ 1)

**தீர்மான எண்..539 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..2</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பழைய பேருந்து நிலைய 1–ம் கட்ட கடை எண்கள்.1 முதல் 4 வரையிலும், III –ம் கட்ட கடை எண்கள்.1 முதல் 22 மற்றும் பழைய பேருந்து நிலையத்திலுள்ள உணவகம் ஆகியவைகள் சேர்த்து 27 கடைகளை முழுவதுமாக இடித்து அப்புறபடுத்துதல் பணிக்கு 19.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலைய 1–ம் கட்ட கடை எண்கள்.1 முதல் 4 வரையிலும், III –ம் கட்ட கடை எண்கள்.1 முதல் 22 மற்றும் பழைய பேருந்து நிலையத்திலுள்ள உணவகம் ஆகியவைகள் சேர்த்து 27 கடைகளை முழுவதுமாக இடித்து அப்புறபடுத்துதல். | ரூ.5,50,000/– | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 0.03 % குறைவு |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 5.41 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள கே.எடிசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.5439/2018/இ.1) |

**தீர்மான எண்..540 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..3</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி TN 49 AT 1742 ஈப்பிற்கு ஆயில், டீசல் பில்டர், ஆயில் பில்டர் மாற்றம் செய்தல் பணிக்கு 13.08.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு நிறுவனங்களிடமிருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.
ஃ

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | TN 49 AT 1742 ஈப்பிற்கு ஆயில், டீசல் பில்டர், ஆயில் பில்டர் மாற்றம் செய்தல் | ரூ.10,000/– | சக்தி ஆட்டோ சர்வீஸ், தஞ்சாவூர் | 9168/– |
| | | | ரஹ்மான் ஆட்டோ கேரேஜ், தஞ்சாவூர் | 9676/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கார்கேர் சர்வீஸ், தஞ்சாவூர் | 9994/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை சக்தி ஆட்டோ சர்வீஸ், தஞ்சாவூர் நிறுவனம் அளித்துள்ளார். இவ்விலைப்புள்ளியானது மற்ற இரண்டு நிறுவனங்கள் அளித்துள்ள விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளது. ஆகவே சக்தி ஆட்டோ சர்வீஸ், தஞ்சாவூர் அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள சக்தி ஆட்டோ சர்வீஸ், தஞ்சாவூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இச்செலவினத்தை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 8037/2011/இ 1) |

**தீர்மான எண்..541.. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

## <u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>

**ஸ்ரீ சார்வரி வருடம் புரட்டாசி மாதம் 14–ம் தேதி திருவள்ளுவராண்டு 2051 (2020–ம் ஆண்டு செப்டம்பர் 30–ம் தேதி) புதன்கிழமை மதியம் 1.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சுப்பையா,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**<u>பொருள் எண்..1</u>**

பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 பெருமாள் கோவில் புதுரோட்டில் புதியதாக வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் கொரோனா வார்டுகளாக செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் தினசரி வாடகைக்கு 62.5 KVA திறன் கொண்ட இரண்டு ஜெனரேட்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிக்கான 15.07.2020 ல் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி தொகை தற்போது முடியும் தருவாயில் இருப்பதாலும் , இக்கொரோனா தடுப்பு மையம் மேலும் சில மாதங்கள் செயல்படும் என்பதாலும் மேலும் இப்பணிக்கான நிர்வாக அனுமதியை நீட்டித்து செய்திடவும் அதற்குண்டாகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) செலவினத்தினை கொரோனா நிதி அல்லது வருவாய் நிதியின் |

| | |
|---|---|
| | கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2002 /2020/இ1) |

**தீர்மான எண்..542 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

<u>பொருள் எண்..2</u>

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள்– 2018–19 நகராட்சி உரக்கிடங்கில் பயோ மைனிங் அமைக்கும் பணிக்கு M/s Allwing Dumpyard Segregation , Chennai நிறுனத்திற்கு 07.11.2018 ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது. நகராட்சி உரக்கிடங்கில் பயோ மைனிங் பணிகள் போதிய இயந்திரங்கள் முழுமையாக நிறுவப்படாமலும் வைபரேட்டர் போன்றவை கடந்த 15.5.19 க்குள் நிறுவியவுடன் பணிகளை துரிதப்படுத்துவதாக கூறி நாளது தேதிவரை இயந்திரங்களை முழுமையாக நிறுவதற்கு எவ்வித முயற்சியும் , ஈடுபாடும் காட்டாமல் இருந்து வருகிறது.

இப்பணிகள் அரசின் திட்டப்பணிகள் என்பதனால் தேசிய பசுமைத் தீர்ப்பாய அறிவுரைகளின்படி குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முடித்து அரசுக்கு அறிக்கை அனுப்பும் சூழ்நிலை உள்ளதாலும். இப்பணியினை விரைவில் முடித்திட அறிவுறுத்தி அந்நிறுவனத்தாருக்கு பல்வேறு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. இதை தவிர பல கடிதங்களிலும் , பதிவு அஞ்சல் கடிதங்களும் அனுப்பப்பட்டது. அன்னாரால் தெரிவிக்கப்பட்ட முகவரியில் இல்லை என்பதால், தவறான முகவரி என தெரிவிக்கப்பட்டு , திரும்ப நகராட்சி அலுவலகத்திற்கே திருப்பப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காலம் முடிவடைந்த நிலையில ் மேற்படி பணியினை முடித்து தராமல் இவ்ஒப்பந்த நிறுவனம் இருந்து வருகிறது. இதன் காரணமாக உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டங்களில் , இந்நகராட்சிக்கு அவப் பெயர் ஏற்படுகின்றது.

மேற்படி நிறுவனம் இயந்திரங்களை முழுமையாக நிறுவி, கையாளக்கூடிய கழிவுகளை கலந்தாலோசகராக நியமிக்கப்பட்ட பேராசிரியர், அண்ணா பல்கலைகழகம் , சென்னை அவர்களின் அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு கழிவுகள் அகற்றப்பட வேண்டும் எனவும் அண்ணா பல்கலைகழக பேராசிரியர் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி 1) தினசரி இயக்கப்படும் இயந்திரங்களின் விபரம் , 2) கழிவுகளை கையாண்ட கொள்ளளவு , 3) நகராட்சியால் வழங்கப்பட்ட மும்முனை மின்இணைப்பின் பயனீட்டு அளவு , 4) கழிவுகளிலிருந்து பெறப்பட்ட Fine soil (or) Manure , Coarse soil , RDF, Glass, Inerts ஆகியவற்றை எந்தந்த விற்பனையார்களிடம் விற்பனை செய்ய ஒப்பந்ததாரரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை உரிய பதிவேடுகள் மூலம் பராமரிக்கவும் ,5) தினசரி அறிக்கையினை நகராட்சி பொறியாளரிடம் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மேலும் இந்நிறுவனத்திற்கு பல்வேறு அறிவுப்புகள் வழங்கப்பட்ட நிலையில் , எவ்வித செயல்திட்டத்துடன் கூடிய விளக்கமும் அளிக்காமல் பணியினை விரைந்து முடித்திட எவ்வித முயற்சியும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. இந்நிலையில் 19.02.2020 அன்று அண்ணா பல்கலைகழக தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வு மேற்கொண்டதில் மிகக் குறைந்த

அளவிலான சுமார் 1850 cu.m கழிவுகள் மட்டுமே கையாளப்பட்டுள்ளது என தெரியவருகிறது. எனவே அவ்வல்லுநர்கள் அறிவுறுத்தியவாறு தினந்தோறும் 250 cu.m குப்பை கழிவுகள் கையாளும் வகையில் கூடுதலாக பணியாளர்களை நியமித்தும் கூடுதல் இயந்திரங்களை முழுமையாக உட்படுத்தியும் பயோ மைனிங் பணியினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேலும் தினசரி பணியினை மேற்கொண்ட விபரத்தினை ஒப்பந்ததாரர் அவர்கள் நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரிடம் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டிருந்தும் கூடுதல் பணியாளர்களை கொண்டு பணியினை துரிதபடுத்துவதாகவும் , ஷிப்ட் அடிப்படையில் (இரவு பகலாக ) பணி மேற்கொள்ள திட்டமிட்டதாக கூறிவந்த இந்நிறுவனம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்து வருகிறது.

இதனால் பணியினை குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்கப்படாமல் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதுடன், களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்நிறுவனம் மிக ஆமை வேகத்தில் பணி மேற்கொண்டால், இனி ஓராண்டு ஆனாலும் பணி முழுவதுமாக முடிக்க இயலாது என தெரிய வருகிறது. மேலும் பணியின் சிரத்தன்மை குறித்து கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. ஆகவே, இதன்
அடிப்படையில் M/s Allwing Dumpyard Segregation, Chennai நிறுனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்யவும், இப்பணிக்காக நகராட்சி நிர்வாகமானது செலவிடப்பட்ட செலவீனங்களாகிய பயோ மைனிங் பணிக்கான கலந்தாலோசகர் நியமனத்திற்கான கட்டணம், விளம்பர கட்டணங்கள் , இது தொடர்பான இதர செலவீனங்கள் அனைத்தையும் அன்னாரது முன்வைப்பு தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்வதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகின்றது. மேலும், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1986 /2018/இ1) |

‘

**தீர்மான எண்..543 .. இதுவரை செய்து முடிக்கப்பட்ட பணியின் விபரம் அண்ணா யுனிவர்சிட்டியிடம் இருந்து பெறப்பட்ட பின்பு அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும் ஒப்பந்ததாரருக்கு ஓர் இறுதி வாய்ப்பு கொடுத்து பார்க்கலாம். எனவே ஒரு இறுதி அறிவிப்பினை அனுப்பலாம்.**

**பொருள் எண்..3**

பட்டுக்கோட்டை நகர எல்லைக்குள் வார்டு 20 கடைத்தெரு மேல்பாகம் வட சரகில் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான வி.என்.எஸ். தினசரி மார்க்கெட் (இறைச்சி மற்றும் மீன் கடைகள்) மற்றும் அவ்வளாகத்தில் இயங்கிவரும் ஆடுவதையகத்திற்கும், 2020–21ம் ஆண்டிற்கான உரிமம் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ள
திருமதி.என்.சுகன்யா நடராஜன்,

மேனேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ.பழனியப்பா டிரஸ்ட்,பட்டுக்கோட்டை என்பவரால் கொடுக்கப்பட்ட விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 2020–2021–ம் ஆண்டிற்கு மேற்படி வி.என்.எஸ்.மார்க்கெட்டின் மொத்த வருவாயில் 15 சதவீதத் தொகை ரூ.1,16,530/– இந்நகராட்சியில் 06.03.2020–ம் தேதியில் செலுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 2020–21ஆம் ஆண்டிற்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். |

**<u>நிபந்தனைகள்</u>**

| | |
|---|---|
| 1. | காய்கறி மார்க்கெட், தளம் பாதை மற்றும் பொது மக்கள் செல்ல ஏதுவாக வழிவகை செய்யவேண்டும். |
| 2. | மேற்கூரை எளிதில் தீப்பற்றாமல் அமைத்திடவேண்டும் |
| 3. | தீ பாதுகாப்பு சாதனங்கள் அமைத்திடல் வேண்டும் |
| 4. | மார்க்கெட் வரும் பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும். |
| 5. | கழிவறை வசதி ஆண், பெண் தனியே அமைத்திடல் வேண்டும். |
| 6. | காய்கறி மார்க்கெட் சுற்றுப்புறம் துாய்மையாக பராமரித்திடல் வேண்டும். |
| 7. | தினசரி சேகரமாகும் காய்கறி மற்றும் மீன் கழிவுகளை பாதுகாப்பாக சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்திட வேண்டும். |
| 8. | தினசரி மார்க்கெட் பகுதியில் உணவு சம்மந்தமான விற்பனையாளர்கள் ஆண்டுதோறும் நகராட்சியில் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில் உரிமம் மற்றும் உணவு கலப்பட தடைச்சட்ட உரிமம் பெற்றிட வேண்டும். |
| 9. | மீன் விற்பனை செய்யுமிடம் சுகாதாரமாக பராமரித்திடல் வேண்டும். |
| 10. | மீன் விற்பனையாளர்கள், மீன் வெட்டுபவர்கள் நகராட்சிவிதிகளுக்குட்பட்டு லைசென்ஸ் வாங்கவேண்டும். |
| 11. | அறுக்கப்படும் தகுதியான ஆடுகள் கால்நடை மருத்துவர் ஆய்வுக்குப் பின் அறுக்கப்படவேண்டும் மற்றும் கால்நடை மருத்துவரின் சான்று பெறப்பட வேண்டும். |
| 12. | ஈக்கள் மற்றும் பூச்சிகள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 13. | ஆடு வெட்டப்படும்போது சேரும் கழிவுகளை (தேவையற்ற உறுப்புகள்) முறையே பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட வேண்டும். |
| 14. | ஆடு அடிக்கும் சாலையில் குழந்தை தொழிலாளர்கள் எவரையும் பணியமர்த்தக் கூடாது. |
| 15. | ஆடு வதை சாலை பிராணிகள் வதை தடுப்புச்சட்டம் 2001ன் கீழ் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் மட்டும் ஆடுகள் வெட்டப்பட வேண்டும். |
| 16. | மார்க்கெட் அலுவலகத்தில் ஆய்வுப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். |
| 17. | தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து தடையின்மை சான்று பெறவேண்டும். |

| | |
|---|---|
| 18. | நகராட்சி அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்து சுட்டிக்காட்டப்படும் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். |
| 19. | தற்பொழுது கொரோனா தொற்று நோய் பரவுவதால், மார்க்கெட் பகுதியில் அனைவரும் முக கவசம் அணிந்திருக்க வேண்டும். மேலும் சமூக இடைவெளி பின்பற்றப்பட வேண்டும். |
| 20. | அரசின் வழிகாட்டுதல்படி கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் முறையான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். |
| 21. | மார்க்கெட்டிற்கு வரும் பொது மக்களின் வாகனங்கள் நிறுத்த தனியாக இடம் போதுமான அளவில் இருக்க வேண்டும். |
| 22. | இந்த உரிமம் 31.03.2021 வரை செல்லத்தக்கது. |
| 23. | நகர் மக்களின் சுகாதாரம் கருதி, எந்த நேரத்தில் நகராட்சி நிர்வாகம் மார்க்கெட்டினை அடைக்க தெரிவிக்கிறதோ, அந்த நேரத்தில் மார்க்கெட்டினை அடைக்கப்பட வேண்டும்.<br>(ந.க.எண்..2414/2020/அ2) |

**தீர்மான எண்..544 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..4**

கொரோனா பொது ஊரடங்கு காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள் / வரியில்லா இனங்களுக்கு வாடகைத் தொகையினை செலுத்துவதிலிருந்து 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு விலக்கு அளித்து அ.ஆ(பத்தாண்டு) எண்..298, ந.நி.ம.கு.வ.(ந.நி.4) துறை, நாள்..02.09.2020 அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | அரசாணையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.. 2609/2020/அ2) |

**தீர்மான எண்..545 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..5**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.14989/2016/பி1, நாள்..22.09.2017–ல் 14வது மத்திய நிதி குழு மான்யம் 2017–18 (Central Grants 14th Central Finance Commission Sanction of General Basic

Grants for the Third Finanical year of 2017-18 First Installements Grants ) திட்ட நிதியின் கீழ் ரூ.171.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் – 2017–18–ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு மத்திய அரசு மான்யத் தொகை ரூ.0.27 இலட்சம் நீங்கலாக மீதமுள்ள தொகை ரூ.144.00 இலட்சத்திற்கு மழைநீர் வடிகால் மேற்பகுதியில் நடைபாதை அமைக்க வழிவகை செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகர்மன்ற தீர்மான எண்.239, நாள்.05.10.2017–ன்படி மேற்படி ரூ.144.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 இடங்களில் நடைபாதை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், தஞ்சாவூர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண்.2925/2017/இ1, நாள்.10.11.2017–ன்படி ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட இரண்டு பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 24 | சின்னையா தெருவில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் மேற்பகுதியில் நடைபாதை அமைத்தல் | 33.00 |
| 2. | 19 | நகரம் ரோடு இருபுறத்திலும் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் மேற்பகுதியில் நடைபாதை அமைத்தல் | 44.00 |
| | | கூடுதல் | 77.00 |

மேற்படி 6 பணிகளில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மேற்கண்ட 2 பணிகள் போக மீதமுள்ள 4 பணிகளுக்கு கீழ்கண்டவாறு பட்டுக்கோட்டை நகராட்சி பொறியாளரிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

| வ.எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 19 | அறந்தாங்கி ரோடு முக்கத்தில் இருந்து பண்ணவயல் சாலை மாதா கோவில் வரை உள்ள ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் மேற்பகுதியில் நடைபாதை அமைத்தல் | 11.00 |
| 2. | 15 | பிள்ளையார் கோவில் தெரு வடக்குபுறம் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் மேற்பகுதியில் நடைபாதை அமைத்தல் | 15.00 |
| 3. | 24 | பழனியப்பன் தெருவில் உள்ள ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் மேற்பகுதியில் நடைபாதை அமைத்தல் | 25.00 |
| 4. | 14 | தலையாரித்தெரு தெரு வடக்குபுறம் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் | 16.00 |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்பகுதியில் நடைபாதை அமைத்தல் | |
| | | **கூடுதல்** | **67.00** |

மேற்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கிய 4 பணிகளில் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.67.00 இலட்சத்தில் வரிசை 1 மற்றும் 2 ல் காணும் பணிகள் ரூ.18.09 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள வரிசை எண்.3 மற்றும் 4ல் காணும் பணிகள் இதுநாள் வரை துவங்கப்படவில்லை.

நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்கள் வழங்கிய தொழில்நுட்ப அனுமதியில் வரிசை எண்.2ல் காணும் பணி மட்டும் ரூ.26.51 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வரிசை எண்.1–ல் காணும் பணி துவங்கப்படவில்லை.

ஆகவே, ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.144.00 இலட்சத்தில் தற்போது வரை ரூ.44.60 இலட்சத்திற்கு மட்டும் மழைநீர் வடிகால் மேற்பகுதியில் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்பொழுது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தார் சாலை தேவைப்படுவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.14989/2016/பி.1, நாள்.22.09.2017–ல் தெரிவித்துள்ளபடி, மேற்படி நடைபாதை அமைக்க இயலாத மூன்று நடைபாதை பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை மற்றும் மீதமுள்ள சேமிப்புத் தொகை ரூ.99.40 இலட்சத்தில் தார் சாலைகள் அமைப்பதற்கு கீழ்கண்டவாறு நான்கு சிப்பங்களாக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு

| Sl.No | W.No | Name of work | Type of road extisting | Type of road Providing | Length in Km | Width of road in M | Estimate cost in Lakhs |
|---|---|---|---|---|---|---|---|
| | | **சிப்பம்–1** | | | | | |
| 1 | 02 | கீழப்பாளையம் ரோடு | மண் சாலை | தார் சாலை | 0.440 | 4.10 | 24.90 |
| | | **சிப்பம்–2** | | | | | |
| 2 | 30 | சிவக்கொல்லை நேத்தாஜி நகர் | மண் சாலை | தார் சாலை | 0.450 | 4.10 | 24.90 |
| | | **சிப்பம்–3** | | | | | |
| 3 | 27 | பாரதி சாலை | தார் சாலை | தார் சாலை | 0.240 | 4.10 | 24.90 |
| | 27 | என்.ஆர்.கார்டன் | மண் சாலை | தார் சாலை | 0.040 | 4.10 | |
| | 31 | லெட்சத்தோப்பு | தார் சாலை | தார் சாலை | 0.150 | 4.10 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிப்பம்–4 | | | | | |
| 4 | 27 | பாரதி சாலை | தார் சாலை | தார் சாலை புதுப்பித்தல் | 0.090 | 4.10 | 24.70 |
| | 13 | காசாங்குளம் முதல் சந்து | தார் சாலை | தார் சாலை புதுப்பித்தல் | 0.180 | 6.00 | |
| | 27 | லிட்டில் பேர்ட் ஸ்கூல் சாலை. | தார் சாலை | தார் சாலை | 0.235 | 4.10 | |
| | | **Total** | | | **1.825** | | **99.40** |

திருத்திய நிர்வாக அனுமதி வழங்கிடவும் துவங்காத பணியான வரிசை எண்.1–ல் உள்ள மண்டல செயற்பொறியாளர், தஞ்சாவூர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பணியின் தொழில்நுட்ப அனுமதியை இரத்து செய்து உத்திரவு வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பிடவும், புதியதாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி ,அதனை தொடர்ந்து நகராட்சி பொறியாளரிடம் தொழில் நுட்ப அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 6345 /2017/இ1) |

**தீர்மான எண்..546 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..6**

பட்டுக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையாக பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு கிருமிநாசினிகள் தெளிக்க பயன்படும் பெட்ரோல் விநியோகம் செய்தல். | ரூ.33,828– | எம்.கோதண்டபாணி ஏஜென்சீஸ், பட்டுக்கோட்டை. | ரூ.33,828– |
| 2. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியில் பெருமாள் கோவில் தெருவில் அமைந்துள்ள கொரோனா பாதுகாப்பு மையத்திற்கு | ரூ.45,000– | அமா இன்டஸ்ட்ரீஸ், 71/74, | ரூ.45,000– |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேவையான தள்ளுவண்டிகள் 3 எண்ணிக்கை சப்ளை செய்தல். | | புது மார்க்கெட், பட்டுக்கோட்டை. | |
| 3. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு பாதுகாப்பு உபகரணங்கள் காட்டன் கையுறை, Hand Sanitizer, முகவுறை சப்ளை செய்தல். | ரூ.1,08,000– | ஜி.பி.இஞ்சினியரிங் எண்டர்பிரைசஸ, டி.டி.ரோடு, உறையூர், திருச்சி. | ரூ.1,08,000– |
| 4. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு கிருமிநாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், பினாயில் ஆகியவைகள் சப்ளை செய்தல். | ரூ.2,99,500– | யசோதா ஏஜென்சீஸ், 87/ஏ, தஞ்சாவூர் ரோடு, பட்டுக்கோட்டை. | ரூ.2,99,500– |
| 5. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியில் பெருமாள் கோவில் தெருவில் அமைந்துள்ள கொரோனா பாதுகாப்பு மையத்திற்கு தேவையான போரோ சாக்குகள் 1000 எண்ணிக்கைகள் சப்ளை செய்தல். | ரூ.35,000– | விக்டரி பாலி பேக்ஸ், வைரம் நகர், நைனாங்குளம், பட்டுக்கோட்டை. | ரூ.35,000– |
| 6. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு கிருமிநாசினி சோடியம் ஹைபோ குளோரைடு 5000 லிட்டர்கள் சப்ளை செய்தல். | ரூ.2,10,000– | ஜி.பி.இஞ்சினியரிங் எண்டர்பிரைசஸ, டி.டி.ரோடு, உறையூர், திருச்சி. | ரூ.2,10,000– |
| 7. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு நகர் பகுதி முழுவதும் மருத்துவ முகாம் பற்றிய அறிவிப்பு 25.07.2020 முதல் 09.08.2020 வரைே 16 நாட்கள் விளம்பரம் செய்தல். | ரூ.96,000– | எம்.எஸ்.ராகம் அட்வர்டைசிங், பெரிய தெரு, பட்டுக்கோட்டை. | ரூ.96,000– |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்..1144/2020/எச்1) |

**தீர்மான எண்..547 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது .**
**பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்..7</u>**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்..14 அழகிரி நாளங்காடி வளாக பகுதியில் அமைந்துள்ள கடைகளின் (கடை எண்..28 முதல் 41 வரை) மேற்கூரை பகுதி மழையால் சேதமடைந்த நிலையில் இருப்பதால் கடைகளின் மேற்பகுதியில் புதிதாக தட்டு ஓடு பதிக்கவும், மேற்கூரையின் உள் பகுதியில் சேதமடைந்த பகுதியினை புதிதாக பூசவும், அவ்வளாக பகுதியில் உள்ள OCC அருகில் Shredding machine நிறுவுவதற்கு புதிதாக பிளாட்பாரம் மற்றும் மேற்கூரை அமைத்திட கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|

| | | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அழகிரி மார்க்கெட் வளாகத்தில் OCC அருகில் வாழைத்தார் அறுக்கும் Shredding machine நிறுவிட பிளாட்பாரம் மற்றும் மேற்கூரை அமைத்தல். | ரூ.1.50 |
| 2. | அழகிரி மார்க்கெட் வளாகத்தில் உள்ள தினசரி அங்காடி (கடை எண்..28 .முதல் 41 வரை) மேற்கூரை பகுதியில் தட்டோடு அமைக்கும் பணி. | ரூ.4.25 |

| அலுவலக குறிப்பு.. | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2)இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.. 2381 /2020/இ1) |

**தீர்மான எண்..548 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது .**

<u>பொருள் எண்..8</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளுக்காக இயங்கிவரும் T.N.49.BX.1320 காம்பாக்டர் வாகனத்திற்கு 2020–2021–ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள உண்டான உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அன்றாட பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி மேற்கண்ட வாகனத்தின் பணியினை உடன் மேற்கொண்டு வாகன பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க.எண்..2201/2020/எச்1) |

**தீர்மான எண்..549 .. அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழங்கியதை அனுமதிக்கப்பட்டது .**

**ஆணையர்/தனி அலுவலர்**
**பட்டுக்கோட்டை நகராட்சி**